பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

14 08 2024 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. நாட்டின் 78-வது சுதந்திர தினத்தையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு ஏழு மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.
2. இல்லம் தோறும் தேசியக் கொடி இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.
3. நகராட்சி நிர்வாகத்துறைக்கு மாநில அரசு 24 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அதிகாரிகளை மாநில அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் அறிவுறுத்தியுள்ளார்.
5. தமிழகத்தில் 13 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாட்டின் 78-வது சுதந்திர தினத்தையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று இரவு ஏழு மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் அவரது உரை இடம்பெறுகிறது.

குடியரசுத் தலைவர் உரையின் தமிழாக்கம் இரவு மணி 9-30-க்கு ஒலிபரப்பாகிறது.

இதனை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

குடியரசுத் தலைவரின் உரையை அடுத்து வழக்கமாக இரவு மணி

7-15-க்கு ஒலிபரப்பாகும் ஆகாஷவாணி செய்தி அறிக்கை இரவு எட்டு மணிக்கு ஒலிபரப்பாகும்.

**[]<<<>>>[]**

இல்லம் தோறும் தேசியக் கொடி இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்று தங்கள் இல்லங்களில் தேசியக் கொடியை ஏற்ற வேண்டும் என தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக தில்லியில் தமது இல்லத்தில் அவர் நேற்று தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

இது தொடர்பாக அவர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், வீரமும் தியாகமும் இணைந்து பெற்ற சுதந்திரத்தின் அடையாளமாக தேசியக் கொடி விளங்குகிறது என்றும் இதை மக்கள் தங்கள் இல்லங்களில் ஏற்றி கொண்டாட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

நாடு சுதந்திரம் அடைந்தபோது ஏற்பட்ட பிரிவினை துயரங்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

1947-ஆம் ஆண்டு இதே நாளில் இந்தியாவிலிருந்து, பாகிஸ்தான் பிரிக்கப்பட்டபோது ஏற்பட்ட வன்முறையில் ஏராளமானோர் உயிரிழந்னர்.

பிரிவினையின்போது ஏற்பட்ட துயரங்களை நினைவு கூர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 14-ஆம் தேதி பிரிவினை துயங்கள் நினைவு தினமாக அனுசரிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்நாளையொட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளில் பிரிவினையால் ஏற்பட்ட துன்பங்களை நினைவுகூரும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் ஆளுநர் மாளிகையில் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின் சார்பில் நடைபெறும் பிரிவினை துயரங்கள் தொடர்பான புகைப்பட கண்காட்சியை தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தொடங்கி வைக்கிறார்.

**[]<<<>>>[]**

நகராட்சி நிர்வாகத்துறைக்கு மாநில அரசு 24 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

திருவள்ளூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சில நகராட்சிகளின் தரம் உயர்த்தப்பட்டதை அடுத்து மாநகராட்சிகளின் எண்ணிக்கை 25-ஆக அதிகரித்துள்ளது என்றார்.

<u>*(சவுண்ட்பைட் - கே என் நேரு ) -48--- செண்ட்*</u>

தமிழகத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்றும் திரு கே என் நேரு கூறினார்,

**[]<<<>>>[]**

இளைஞர்களுக்கு படிப்பிற்கேற்ற வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தர வேண்டும் என்ற நோக்கில் மாநில அரசு செயல்படுவதாக தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா கூறியுள்ளார்.

இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்று பேசிய அவர், தமிழகத்தின் பொருளாதாரத்தை ஒரு ட்டிரில்லியன் என்ற அளவுக்கு உயர்த்த கிராமப்புறங்களின் வளர்ச்சி மிக அவசியம் என்று தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் தொழில் முதலீடுகளை அதிகரிக்கும் நோக்கில் கூடுதல் மானியங்கள் வழங்கப்பட்டு வருவதாக திரு டி ஆர் பி ராஜா கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை அதிகரிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அதிகாரிகளுக்கு மாநில வேளாண் அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார்.

தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தியை அதிகரிக்கவும், புதிய வகை பழ செடிகளை நடவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்,

கீரைகள் மற்றும் காய்கறிகள் சாகுபடியை ஊக்குவிக்க வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார்.

மக்கள் அதிகமாக வசிக்கும் சென்னை மாநகருக்கு காய்கறிகளின் வரத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்றும் அதிகாரிகளை திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தமிழகத்தில் போதைப் பொருள் தடுப்பு தொடர்பாக, மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை உணர்ந்து மாநில அரசு செயல்பட வேண்டும் என்று திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

[]<<<>>>[]

கோவையில் நடைபெற்று வரும் பன்னாட்டு விமானப்படை பயிற்சி பல்வேறு நாடுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் என விமானப்படை தளபதி திரு வி ஆர் சௌத்திரி கூறியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பயிற்சி போர் விமானங்கள் மற்றும் அவை சார்ந்த தொழில்நுட்பங்கள் தொடர்பானது என்று தெரிவித்தார்.

இந்த பயிற்சியில் முதல் முறையாக தேஜஸ் போர் விமானம் இடம்பெற்றதாகவும், இந்த விமானம் இனி வரும் பயிற்சிகளில் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் திரு வி ஆர் சௌத்திரி கூறினார்.

[]<<<>>>[]

ராமேஸ்வரம் மீனவர்கள் கடலுக்குச் செல்லும்போது அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களையும், உயிர்காக்கும் உடைகளையும் தவறாமல் எடுத்துச் செல்ல வேண்டுமென ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் திரு சிம்ரன் ஜித் சிங் காலோன் கேட்டுக் கொண்டுள்ளார்.

ராமேஸ்வரத்தில் நடைபெற்ற மீனவர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், கடலில் மீன்பிடிக்கும் போது எல்லை தாண்டி செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தினார்.

அவசர காலங்களில் மீனவர்களுக்கு உதவ கடற்படை தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மீனவர்களுக்காக மத்திய மாநில அரசுகள் செயல்படுத்தும் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தின் வேளாங்கண்ணியில் அடுத்த மாதம் நடைபெறும் திருவிழாவையொட்டி மும்பை - வேளாங்கண்ணி இடையே நான்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படவுள்ளதாக மத்திய ரயில்வே அறிவித்துள்ளது.

இம்மாதம் 26 ஆம் தேதி முதல் அடுத்த மாதம் ஒன்பதாம் தேதி வரை இரு மார்க்கங்களிலும் இந்த ரயில் இயக்கப்படவுள்ளது.

இந்த ரயில்களுக்கான முன்பதிவு இன்று தொடங்கும் என மத்திய ரயில்வே கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி, தென்காசி, தேனி, திண்டுக்கல், திருப்பூர், நீலகிரி, உள்ளிட்ட 13 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

பிற மாவட்டங்களில் சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ரஷ்ய எல்லைப் பகுதிகளில் யுக்ரைன் நடத்தும் தாக்குதல்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என ரஷ்ய அதிபர் திரு விளாதிமிர் புடின் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

பங்களாதேஷில் தற்போது ஏற்பட்டுள்ள போராட்டத்துக்கும் அமெரிக்காவுக்கும் எந்த தொடர்பும் இல்லை என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பார்சி சமூகத்தினரின் மேம்பாட்டுக்காக செயல்படுத்தப்படும் ஜியோ பார்சி திட்டம் தொடர்பான இணையதளத்தை மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

புவி கண்காணிப்புக்கான இ ஓ எஸ்-08 செயற்கைக் கோள், எஸ்எஸ்எல்வி டி-த்ரி ராக்கெட் மூலம் நாளை மறுநாள் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்தப்படும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி மாவட்டம் வாணியந்தலில் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் நேற்று திறந்து வைத்தார்.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம் சந்திரசேகரபுரத்தில், மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் மக்கள் தொடர்பு கள அலுவலகம் சார்பில் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் இயக்கம் குறித்த சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

[]<<<>>>[]

நாட்டின் 78-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தூத்துக்குடியில் அஞ்சலக ஊழியர்கள் பங்கேற்ற தேசியக்கொடி பேரணி நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ஆன்லைன் பஸ் பாஸ் வழங்குவதற்கான சிறப்பு முகாம்கள் இம்மாதம் 20-ஆம் தேதி முதல் 23-ஆம் தேதி வரை நடைபெறும் என மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

சென்னையில் விபத்து இல்லாத மாநகரம் தொடர்பான இயக்கத்தின் ஒருபகுதியாக, மீனம்பாக்கத்தில் போக்குவரத்துக் காவல் துறை சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சியின் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வருவாய் மற்றும் கல்வித்துறை சார்ந்த திட்டங்களை மேயர் திருமதி பிரியா நேற்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்த போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடு மீதான தீர்ப்பு நாளை மறுநாள் வழங்கப்படும் என்று சர்வதேச விளையாட்டு நடுவர்மன்றம் தெரிவித்துள்ளது.

நேற்று தீர்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மூன்றாவது முறையாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.